**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8102101

1. District மாவட்டம் : சிவகங்கை  PS: காவல்நிலையம்: ஊ.த.க பிரிவு சிவகங்கை  Year: ஆண்டு 2022  FIR No.: மு.த.அ. எண் 02/2022  Date: நாள் 23.05.2022

2. (i) Act சட்டம்: I.P.C.  Sections பிரிவுகள்: 120(B), 167, 409, 420, 465, 467, 468, r/w 109 IPC. and
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Prevention of Corruption Act  Sections பிரிவுகள்: 13(2) r/w 13(1)(c) of PC Act 1988 and 13(1)(a) of PC Act (as amended in) Act-2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல் 2015  Date to : நாள் வரை 2019
   Time Period : நேர அளவு —  Time from : நேரம் முதல் —  Time to : நேரம் வரை —
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.05.2022  Time : நேரம் 14.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL - I  Time : நேரம் 14.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக on petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 25 Km. South East.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி Maravamangalam panchayat, Sivagangai District.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. Ramachandran
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. Kulanthaivelu
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 25.07.1971
   (d) Nationality : நாட்டினம் Indian
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Deputy Superintendent of police
   (g) Address : முகவரி Vigilance and Anti-Corruption, Virudhunagar, I/c. Sivagangai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   [Separate sheet Attached]

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 17(A)-ன் கீழ் முன் அனுமதி பெற்று இவ்வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

GCP 240-34(Type-2) 90.000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

/ Separate Sheet attached /

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Ts. R. Jesudoss Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS VXAC, Sivaganga .......on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
23.05.22

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
23.05.2022 at 16.00 hrs

Name: பெயர் K. Ramachandran,
Rank: நிலை D.S.P. .....No. எண் ..........
VS&AC, Virudhunagar,
I/c. Sivagangai.

குற்றம்சாட்டப்பட்ட அலுவலர்கள்

1) திருமதி.முத்துக்கண்ணு, ஊராட்சி செயலாளர்/எழுத்தர், மறவமங்கலம் ஊராட்சி, காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம்.

2) திரு.சோம.செல்வராஜ், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம். பணிக்காலம் (25.12.2014 முதல் 25.02.2015 வரை)

3) திரு.இரா.ரமேஷ், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம். பணிக்காலம் (25.02.2015 முதல் 09.04.2015 வரை மற்றும் 05.12.2015 முதல் 12.08.2016 வரை)

4) திருமதி.ஆ.அமலோற்பவம், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம். பணிக்காலம் (10.04.2015 முதல் 05.12.2015 வரை)

5) திருமதி.அ.சந்திரா, முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம். பணிக்காலம் (12.08.2016 முதல் 15.05.2017 வரை)

6) திருமதி.சா.நஸிராபேகம், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம். பணிக்காலம் (15.05.2017 முதல் 21.07.2017 வரை)

7) திரு.டி.என்.அன்புத்துரை, முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம். பணிக்காலம் (21.07.2017 முதல் 04.04.2018 வரை)

8) திரு.இளங்கோ தாயுமானவர், முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காளையார் கோவில் ஊராட்சி ஒன்றியம், சிவகங்கை மாவட்டம். பணிக்காலம் (04.04.2018 முதல் 25.11.2019 வரை)

9) திரு.பா.இளங்கோ, முன்னாள் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியம். சிவகங்கை மாவட்டம். பணிக்காலம் (26.11.2019 முதல் 08.07.2021 வரை)

<u>சிவகங்கை சிறப்பு நீதிபதி ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 நீதிமன்றம் முன்பாக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.</u>

சிவகங்கை மாவட்டம் காளையார் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மறவமங்கலம் ஊராட்சியில் ஊராட்சி செயலாளர்/எழுத்தராகப் பணிபுரியும் திருமதி.முத்துக்கண்ணு மற்றும் சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர்கள் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 பிரிவு 17(A)-ன் கீழ் முறையான வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள மாவட்ட ஆட்சியர், சிவகங்கை மாவட்டம் கடிதம் எண்.Roc.P/11309/2021-1 and Roc.P/11309/2021-2 நாள் 31.01.2022 மற்றும் Rural Development and Panchayat Raj (E2) Department G.O.(3D)No.23, Dated 29.04.2022-ன்படி முன் அனுமதி பெற்று, இன்று 23.05.2022 பிற்பகல் 14.00 மணிக்கு நான் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் பொறுப்பில் இருந்தபோது சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக நமுனா எண். Petition No.13203/2020/RDP/SG, நாள் 19.05.2022 நமுனாவில் கண்ட உத்தரவின்படி காலம் 7ல் கண்ட எதிரிகள் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவுகள் 120(B), 167, 409, 420, 465, 467, 468 உ/இ 109 இ.த.ச மற்றும் 13(2) r/w 13(1)(c) of Prevention of Corruption Act 1988 மற்றும் பிரிவு 13(2) r/w 13(1)(a) ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம், 2018ன் படி சிவகங்கை ஊ.த.க.பிரிவு குற்ற எண்.02/2022-ன்படி கீழ்க்கண்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாக சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் தாலுகா, மறவமங்கலம் அஞ்சல், பால்குளத்தைச் சேர்ந்த அரியமுத்து மகன் பாண்டிகண்ணன் என்பவரின் 15.12.2020 தேதியிட்ட புகார் மனுவின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது.

புகார்தாரர் பாண்டிகண்ணன் தன்னுடைய புகார் மனுவில் மறவமங்கலம் ஊராட்சிக்கு உட்பட்ட பால்குளம், மறவமங்கலம், பூதக்குடி மற்றும் பளுவாக கொடை கிராமங்களில் பாரத பிரதமரின் இலவச கழிப்பறை திட்டத்தில் SBM(G), LOB, திட்டத்தில் 2015-2016, 2016-2017, 2017-18, 2018-2019 நிதியாண்டுகளில்

பயனாளிகளுக்கு இலவச கழிப்பறை கட்டியதில், ஊழல் நடைபெற்றதாக பொது மக்களிடம் பரவலாக பேசப்பட்டது. இதை கருத்தில் எடுத்துக் கொண்ட நான் பொது தகவல் அலுவலர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர், காளையார்கோவில் அவர்களுக்கு தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 பிரிவு 6 ன் படி கேள்விகள் கேட்டு இருந்தேன். எனது மனுவிற்கு பொது தகவல் அலுவலர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அவர்களுடைய கடிதம் எண். ந.க.பி.4/619/2019, நாள் 15.05.2019 தேதியிட்ட கடிதத்தில் நிதியாண்டு வாரியாக பட்டியலிட்டு எத்தனை கழிப்பறைகள் கட்டி ஒதுக்கப்பட்ட பட்டியலை எனக்கு அனுப்பி இருந்தார். பொதுமக்களின் நலனை கருத்தில் எடுத்துக்கொண்டு அரசுப்பணம் வீணடிக்கப்படுகிறது என்ற நல்ல எண்ணத்தோடு நானும் சமூக அக்கறையுள்ள பெரிய மனிதர்களும் பொது தகவல் அலுவலர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அனுப்பிய பட்டியலோடு கழிப்பறை கட்டிய வீடுகள் மற்றும் இடங்களை பார்வையிட்டதில், ஒரு நபரின் பெயரில் இரண்டு கழிப்பறைகளும் அனுமதிக்கப்பட்டதில் ஒரு கழிப்பறை மட்டும் கட்டப்பட்டுள்ளது. ஒரே குடும்பத்தில் கணவன், மனைவி பெயரில் தனித்தனி கழிப்பறைகள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு ஒரு கழிப்பறை மட்டும் கட்டப்பட்டுள்ளது. ஒரே குடும்பத்தில் உறவு முறைகளை மாற்றி நான்கு கழிப்பறைகள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டதில் ஒரு கழிப்பறை மட்டும் கட்டப்பட்டுள்ளது. வீடு இல்லாமல் வாடகை வீட்டில் குடியிருப்பவர்களுக்கும் இறந்த நபர்கள் பெயரிலும் திருமணம் செய்து கணவரோடு வெளியூரில் வசிக்கும் பெண்கள் பெயரிலும் தலா ஒரு கழிப்பறை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு கழிப்பறை கட்டாமல் அரசுப்பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. மறவமங்கலம் ஊராட்சியில் அனுமதிக்கப்பட்ட முப்பது கழிப்பறைகள் கட்டாமல் கட்டியதாக Work Order போட்டு அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து வழங்கப்பட்ட (கழிப்பறை கட்டி முடிக்கப்பட்டு பணம் பட்டுவாடா செய்யப்பட்ட) பட்டியலை ஒவ்வொன்றையும் புலத்தணிக்கை செய்தால் பல உண்மைகள் தெரியவருகிறது. ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திலிருந்து எனக்கு வழங்கப்பட்ட கழிப்பறை கட்டியதற்கான பட்டியலில், கடந்த மற்றும் நடப்பு நிதியாண்டுகளில் கழிப்பறை கட்டிய நபர்கள், கழிப்பறை கட்டாமல் கட்டியதாக

அரசுப்பணத்தை மோசடி செய்த நபர்களின் பெயர், முகவரிப் பட்டியலை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளேன்.

புகார் மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள, கழிப்பறை கட்டாமல் கட்டியதாக அரசுப்பணத்தை மோசடி செய்த நபர்களின் பெயர், முகவரிப் பட்டியல்.

| வ.எண் | பயனாளிகளின் பட்டியலில் கண்டுள்ள வரிசை எண் நிதியாண்டு | ஊராட்சியின் பெயர் | பெயர் த/பெ., க/பெ. பெயர், முகவரி | குறிப்புரை |
|---|---|---|---|---|
| 1. | 12<br>2015–2016<br><br>159<br>2015–2016 | மறவமங்கலம்<br><br>மறவமங்கலம் | பெரியகருப்பன்<br>த/பெ.வெள்ளைச்சாமி<br>பெரியகருப்பன்<br>த/பெ.வெள்ளைச்சாமி<br>மறவமங்கலம் | ஓரே குடும்பத்தில் ஓரே நபர் பெயரில் இரண்டு கழிப்பறைகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு ஒரு கழிப்பறை மட்டும் கட்டப்பட்டுள்ளது. இன்னொரு கழிப்பறை கட்டாமல் அரசுப்பணம் மோசடி செய்யப்பட்டது. |
| 2. | 15<br>2015–2016<br><br>128<br>2015–2016 | மறவமங்கலம்<br><br>மறவமங்கலம் | சுலோச்சனா<br>க/பெ.சண்முகம்<br><br>சுலோச்சனா<br>க/பெ.சண்முகம்<br>மறவமங்கலம் | ஓரே குடும்பத்தில் ஓரே நபர் பெயரில் இரண்டு கழிப்பறைகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு ஒரு கழிப்பறை மட்டும் கட்டப்பட்டுள்ளது. இன்னொரு கழிப்பறை கட்டாமல் அரசுப்பணம் மோசடி செய்யப்பட்டது. |
| 3. | 17<br>2015–2016<br><br>141<br>2015–2016 | மறவமங்கலம்<br><br>மறவமங்கலம் | பொ.நாகராஜன்<br>த/பெ.பொன்னையா<br>மறவமங்கலம்<br><br>தேவி<br>க/பெ.நாகராஜன்<br>மறவமங்கலம் | ஓரே குடும்பத்தில் கணவன், மனைவி பெயரில் இரண்டு கழிப்பறைகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டு ஒரு கழிப்பறை மட்டும் கட்டப்பட்டுள்ளது. இன்னொரு கழிப்பறை கட்டாமல் அரசுப்பணம் மோசடி செய்யப்பட்டது. |
| 4. | 37<br>2015–2016 | மறவமங்கலம் | ரகுமத்<br>க/பெ.சர்புதீன்<br>மறவங்கலம் | ஒரு கழிப்பறை மட்டும் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கழிப்பறை கட்டாமல் அரசுப்பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது |
| 5. | 57<br>2015–2016 | மறவமங்கலம் | திரு.முருகன்<br>த/பெ.முனியாண்டி<br>மறவமங்கலம் | மறவமங்கலம் ஊராட்சி எழுத்தர் முத்துக்கண்ணுவின் கணவராவார். ஒரு கழிப்பறை மட்டும் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் கழிப்பறை கட்டாமல் அரசுப்பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | 102<br>2015–2016 | மறவமங்கலம் | கார்த்திக<br>த/பெ.ஊரன்<br>மறவமங்கலம் | ஒரு கழிப்பறை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் கழிப்பறை கட்டவில்லை. அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. |
| 7. | 111<br>2015–2016<br><br>112<br>2015–2016 | மறவமங்கலம்<br><br><br>மறவமங்கலம் | அமுதா<br>க/பெ.ஆறுமுகம்<br>மறவமங்கலம்<br>அமுதா<br>க/பெ.சாமி<br>மறவமங்கலம் | உறவுமுறையை மாற்றி இரண்டு கழிப்பறைக்கு அனுமதி வழங்கப்பட்டு ஒரு கழிப்பறை மட்டும் கட்டப்பட்டுள்ளது. இன்னொரு கழிப்பறை கட்டாமல் அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டது. |
| 8. | 113<br>2015–2016 | மறவமங்கலம் | பாப்பா<br>க/பெ.சிதம்பரம்<br>மறவமங்கலம் | ஒரு கழிப்பறை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் கழிப்பறை கட்டவில்லை. அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. |
| 9. | 132<br>2015–2016 | மறவமங்கலம் | கருப்பாயி<br>க/பெ.மலையாண்டி<br>மறவமங்கலம் | ஒரு கழிப்பறை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் கழிப்பறை கட்டவில்லை. அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. |
| 10. | 133<br>2015–2016 | மறவமங்கலம் | முரளிகுமார<br>த/பெ.ஆனந்தராமன்<br>மறவமங்கலம் | ஒரு கழிப்பறை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் கழிப்பறை கட்டவில்லை. அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. |
| 11. | 134<br>2015–2016 | மறவமங்கலம் | காளீஸ்வரன்<br>த/பெ.நாராயணன்<br>மறவமங்கலம் | ஒரு கழிப்பறை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் கழிப்பறை கட்டவில்லை. அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. |
| 12. | 197<br>2015–2016 | மறவமங்கலம் | முகமது மார<br>சிக்கந்தர்<br>த/பெ.சையது அலி<br>மறவமங்கலம் | சொந்த வீடு இல்லை வாடகை வீட்டில் வசிக்கிறார்கள். ஒரு கழிப்பறை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் கழிப்பறை கட்டவில்லை. அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. |
| 13. | 144<br>2015–2016 | மறவமங்கலம் | சங்கரபாண்டி<br>த/பெ.அரியமுத்து<br>மறவமங்கலம் | சொந்த வீடு இல்லை வாடகை வீட்டில் வசிக்கிறார்கள். ஒரு கழிப்பறை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் கழிப்பறை கட்டவில்லை. அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| 14. | 156<br>2015–2016 | மறவமங்கலம் | சண்முகம்<br>த/பெ.அரியமுத்து<br>மறவமங்கலம் | ஒரு கழிப்பறை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் கழிப்பறை கட்டவில்லை. அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. |
| 15. | 161<br>2015–2016 | மறவமங்கலம் | கருணாநிதி<br>த/பெ.மழையப்பத்தே வர்<br>மறவமங்கலம் | ஒரு கழிப்பறை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் கழிப்பறை கட்டவில்லை. அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. |
| 16. | 180<br>2015–2016 | மறவமங்கலம் | செல்வம்<br>த/பெ.உடையார்<br>மறவமங்கலம் | ஒரு கழிப்பறை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் கழிப்பறை கட்டவில்லை. அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. |
| 17. | 182<br>2015–2016<br><br>201<br>2016–2017<br><br>288<br>2017–2018<br><br>311<br>2017–2018 | மறவமங்கலம்<br><br><br>மறவமங்கலம்<br><br><br>மறவமங்கலம்<br><br><br>மறவமங்கலம் | இந்திரா<br>க/பெ.முருகன்<br>மறவமங்கலம்<br>ரமேஷ்<br>த/பெ.முருகன்<br>மறவமங்கலம்<br>ரதி<br>க/பெ.முருகன்<br>மறவமங்கலம்<br>அரியநாச்சி<br>க/பெ.முருகன்<br>மறவமங்கலம் | ஒரே குடும்பத்தாரகள் ஒரே குடும்பத்தில் வசித்து வருகிறார்கள். பெயர்கள் மற்றும் உறவுமுறையை மாற்றி நான்கு கழிப்பறைகள் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டு ஒரு கழிப்பறை மட்டும் கட்டியுள்ளார்கள். மூன்று கழிப்பறைகள் கட்டாமல் அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டது. |
| 18. | 211<br>2016–17 | மறவமங்கலம் | பாத்தமுத்து சொகாரா<br>த/பெ.முகமது<br>அவ்சின்<br>மறவமங்கலம் | ஒரு கழிப்பறை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் கழிப்பறை கட்டவில்லை. அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. |
| 19. | 214<br>2016–2017<br><br>217<br>2016–2017 | மறவமங்கலம்<br><br><br>மறவமங்கலம் | பாப்பா<br>க/பெ.செல்லச்சாமி<br><br>பாப்பா<br>க/பெ.செல்லச்சாமி<br>மறவமங்கலம் | ஒரே குடும்பத்தில் ஒரே நபருக்கு இரண்டு கழிப்பறைகள் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் ஒரு கழிப்பறை மட்டும் கட்டப்பட்டுள்ளது. இன்னொரு கழிப்பறை கட்டாமல் அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டது. |
| 20. | 268<br>2017–2018 | மறவமங்கலம் | பஞ்சவரணம்<br>க/பெ.லெட்சுமணன்<br>மறவமங்கலம் | ஒரு கழிப்பறை கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் கழிப்பறை கட்டாமல் அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. |

| | | | | |
|---|---|---|---|---|
| ·21. | 275<br>2017–2018 | மறவமங்கலம் | சின்ன ஊரான் த/பெ.பொன்னு கோனார் மறவமங்கலம் | சின்ன ஊரான் என்பவர் கடந்த 10 ஆண்டுகளுக்கு முன் இறந்துவிட்டார். இறந்த நபர் பெயரில் ஒரு கழிப்பறை கட்டட அனுமதிக்கப்பட்டது.<br>ஆனால் கழிப்பறை கட்டாமல் அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. |
| 22. | 76<br>2015–2016<br><br>342<br>2018–2019 | மறவமங்கலம்<br><br>மறவமங்கலம் | அரியநாச்சி க/பெ.பாண்டித்துரை மறவமங்கலம்<br><br>அகிலா த/பெ.பாண்டித்துரை மறவமங்கலம் | சொந்தவீடு இல்லை வாடகை வீட்டில குடியிருக்கிறார். ஒரே குடும்பத்தில் தாய், மகள் பெயரில் இரண்டு கழிப்பறைகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.<br>இரண்டு கழிப்பறைகளும் கட்டவில்லை.<br>அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது.<br>அகிலா என்பவருக்கு 10 ஆண்டுகளுக்கு முன் திருமணம் ஏற்பட்டு கணவருடன் இராமேஸ்வரத்தில் வசித்து வருகிறார். |
| 23. | 376<br>2018–2019 | மறவமங்கலம் | ஈஸ்வரி க/பெ.வேலுச்சாமி மறவமங்கலம் | ஒரு கழிப்பறை மட்டும் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட்டது<br>ஆனால் கழிப்பறை கட்டாமல் அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. |
| 24. | 394<br>2018–2019 | மறவமங்கலம் | சுதா க/பெ.ராமன் மறவமங்கலம் | மறவமங்கலம் ஊராட்சி எழுத்தர் முத்துக்கண்ணு என்பவரின் உடன்பிறந்த சகோதரி ஆவார். இவரை காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியம் எரிவயல் ஊராட்சிக்கு உட்பட்ட காஞ்சிபுரம் கிராமத்தில் திருமணம் செய்து கொடுத்து கணவருடன் வசித்து வருகிறார். ஒரு கழிப்பறைக்கு அனுமதி வழங்கப்பட்டது. ஆனால் கழிப்பறை கட்டாமல் அரசுப்பணம் மோசடி செய்யப்பட்டது. |

காளையார்கோவில் ஊராட்சி மறவமங்கலம் ஊராட்சியில்

| SMB(G)திட்டத்தில் கீழ்க்கண்ட நிதியாண்டல் LOB திட்டம் | அனுமதிக்கப்பட்ட கழிப்பறைகளின் எண்ணிக்கை | கட்டி முடிக்கப்பட்டதாக பணம் பட்டுவாடா செய்யப்பட்ட கழிப்பறைகளின் எண்ணிக்கை | பூமியில் கட்டிய கழிப்பறைகளின் எண்ணிக்கை | கழிப்பறை கட்டாமல் போலி ஆவணங்கள் தயார் செய்து அரசுப்பணத்தை கையாடல்செய்த கழிப்பறைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2015-2016 | 186 | 186 | 167 | 19 |
| 2016-2017 | 33 | 33 | 32 | 1 |
| 2017-2018 | 119 | 119 | 112 | 7 |
| 2018-2019 | 56 | 56 | 53 | 3 |
| LOB திட்டம் 2018-2019 | 9 | 9 | 9 | - |
| | **403** | 403 | 373 | 30 |

மறவமங்கலம் ஊராட்சியில் பட்டியலில் கண்ட நிதியாண்டுகளில் தகவல் அறியும் உரிமைச்சட்டம் வருடம் 2005 பிரிவு 7ன் படி பொதுத்தகவல் அலுவலர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் கடந்த 15.05.2019 தேதி கையொப்பமிட்டு அனுப்பிய பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள 403 கழிப்பறைகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அனுமதிக்கப்பட்ட கழிப்பறைகள் அனைத்துக்கும் பணம் பட்டுவாடா செய்யப்பட்டதாக பதிவு செய்யப்பட்டது. மறவமங்கலம் ஊராட்சியில் மொத்தம் 373 கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளது. 30 கழிப்பறைகள் கட்டாமல் அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. விசாரணை அதிகாரி பட்டியலில் கண்டுள்ள விவரப்படி, அனைத்து கழிப்பறைகளையும் பூமியில் புலத்தணிக்கை செய்து இன்னும் பல கழிப்பறைகள் அரைகுறையாக கட்டப்பட்டு அரசுப்பணம் பல இலட்சங்கள் மோசடி நடைபெற்றுள்ளது.

மேலும் மறவமங்கலம் ஊராட்சியில் நடைபெற்ற ஊழல் மற்றும் கையாடலில் தொடர்புடைய வளர்ச்சி துறை அதிகாரிகள் மற்றும் மறவமங்கலம் ஊராட்சி எழுத்தர் திருமதி.முத்துக்கண்ணு ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுத்து அரசுப்பணத்தை திரும்ப பெறுவதற்கு உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறேன் என்று இவர் தனது புகார்மனுவில் கூறியுள்ளார். குற்ற அலுவலர்களான வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காளையார்கோவில் ஊராட்சி ஒன்றியம் மற்றும் மறவமங்கலம் ஊராட்சி எழுத்தர் திருமதி.முத்துக்கண்ணு (எதிரி 1 முதல் 9 வரை) ஆகியோர்கள் ஊழல் தடுப்பு சட்டம் 1988 மற்றும் திருத்தப்பட்ட சட்டம், 2018 பிரிவு 2(c)ன் படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

மேலும் மறவமங்கலம் ஊராட்சியில் (2015–2019) நிதியாண்டுகளில் தகவல் அறியும் உரிமை சட்டம் 2005 பிரிவு 7 ன் படி பொது தகவல் அலுவலர் மற்றும் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் 15.05.2019 தேதியிட்டு அனுப்பிய பட்டியலில் பதிவு செய்யப்பட்டுள்ள 403 கழிப்பறைகள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் அனுமதிக்கப்பட்ட கழிப்பறைகள் அனைத்துக்கும் பணம் பட்டுவாடா செய்யப்பட்டதாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மறவமங்கலம் ஊராட்சியில் மொத்தம் 373 கழிப்பறைகள் கட்டப்பட்டுள்ளது. 30 கழிப்பறைகள் கட்டாமல் அரசுப்பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளது. மேலும் பல கழிப்பறைகள் அறைகுறையாக கட்டப்பட்டு அரசுப்பணம் பல லட்சங்கள் மோசடி செய்யப்பட்டுள்ளது என்றும் புகார்தாரர் தன்னுடைய புகாரமனுவில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே குற்றம் சாட்டப்பட்ட அலுவலர்கள் இந்திய தண்டணைச் சட்டம் பிரிவுகள் 120(B), 167, 409, 420, 465, 467, 468 உ/இ 109 இ.த.ச மற்றும் 13(2) r/w 13(c) of Prevention of Corruption Act 1988 மற்றும் பிரிவு 13(2) r/w 13(1)(a) ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018ன் படியும் குற்றச் செயலில் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வழக்கின் அசல் புகார் மனு மற்றும் முதல் தகவல் அறிக்கையை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்ட வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

23.05.22

(K.RAMACHADRAN)
DSP / V&AC / VNR
i/c SVG.